# இழப்பீடுகளுக்கான அலுவலகம்

## நோக்கங்களும் ஆணையும் செயற்பாடுகளும்

இல: 408 காலி வீதி, கொழும்பு- 03

# இழப்பீடுகளுக்கான அலுவலகம்
# இலங்கை
## நோக்கங்களும், ஆணையும், செயற்பாடுகளும்

**இழப்பீடுகளுக்கான அலுவலகம்,**

இல: 408, காலி வீதி, ,கொழும்பு- 03.

புதுப்பிக்கப்பட்ட மறுபதிப்பு - டிசம்பர், 2021



## தலைவரிடமிருந்து

இது திருத்தப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட கேள்வி பதில் கைநூலாகும்.

இக்கைநூலின் முதற் பதிப்பு பங்குனி 2021 ல் வெளியிடப்பட்டதால், கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய இக்கைநூலானது புதிய மறுபதிப்பாக 2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வெளியிடப்படுகிறது.

இக் கைநூலின் முதல் பதிப்பில் கூறியது போல, 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டுச் சட்டத்தின்படி இன்னல்களுக்கான நபர்களுக்குத் தேவையான இழப்பீடுகளை வழங்குவதற்காக புதிய நோக்கினைப்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக இழப்பீடுகளிற்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள் இக்கைநூலை புதுப்பிப்பதன் அவசியத்தினை கருத்திக்கொண்டுள்ளனர். மிக முக்கியமாக, புதிய அலுவலகம், அதன் ஆணை, பணிகள் பரப்பெல்லை, நோக்கம் என்பன தொடர்பிலான துல்லியமான தகவல்களை வெளிக்கொணர்வது அவசியமானதொன்றாகக் கருதப்படுகிறது, இதனால் நிவாரண நடவடிக்கைகளை அணுக விரும்பும் நபர்கள் தங்களுக்குத் தேவையானவை எவை, எவற்றினை இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடமிருந்து எதிர்பார்க்கமுடியும் என்பன குறித்த முழுமையான புரிந்துணர்வுடன் செயற்படமுடியும். அதேபோன்று எங்கள் பணியில் ஆர்வமுள்ள பிற பங்குதாரர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், சட்டத்தின் விரிவான உள்ளடக்கத்தினை ஆராய்வதற்கான தேவையினை நிவர்த்திசெய்வதற்கும் இது போன்ற ஒரு கைநூல் முக்கியமானது என்றும் கருதப்படுகிறது. இலங்கையில் இழப்பீடுகளுக்கான பொறிமுறையினைப் புரிந்து கொள்ள விரும்புவோர் இந்த சுருக்கமான கைநூலினை ஒரு பயனுள்ள வளமாக கருதமுடியும்.

மிக முக்கியமாக, நிவாரணங்களை பெற விரும்புவோருக்கு தகவல்களை வழங்கும் பொருட்டு இக்கைநூலிலுள்ள கேள்வி பதில்கள் பொதுவே சட்ட ரீதியான விளக்கங்களில் காணப்படும் சிக்கலினை தவிர்த்து எளிதான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதல் பதிப்பை அச்சிடுவதற்கு பெற்ற ஆதரவைப் போலவே, இம் மறு பதிப்பினையும் அச்சிடுவதற்கான செலவை ஏற்றுக்கொண்டமைக்காக இடம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனத்திடம் (IOM) பெற்றுக்கொண்ட உதவியினை மீண்டும் ஒருமுறை நன்றியுடன் நினைவுகூர விரும்புகிறேன். இது எங்களின் பாரிய முயற்சிகளுக்கான ஒரு குறிப்பிடத்தக்க ஆதரவு என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் அதன் பணிகள் தொடர்பிலான மேலதிகத் தகவல்களைப் பெற **www.reparations.gov.lk** என்ற இணையதளத்தினைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*தாரா விஜயதிலக*
மார்கழி, 2021.

## இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள்

**திருமதி. தாரா விஜயதிலக, சட்டவழக்கறிஞர், தலைவர்.**
இலங்கையின் பொதுச் சேவையில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய வழக்கறிஞரான திருமதி விஜயதிலக அவர்கள் 1994 ஆம் வருடம் நீதி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதன் மூலம் அமைச்சரவை அந்தஸ்தினையுடைய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட முதற் பெண் என்ற பெருமையினையும் பெற்றுக்கொண்டார். மேலும் அவர் திட்ட அமுலாக்க அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு என்பவற்றின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அவர் இலங்கையின் சட்ட ஆணைக்குழு, தேசிய பெண்கள் ஆணைக்குழு, என்பவற்றின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். திருமதி விஜயதிலக அவர்கள் பொதுச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும், இலங்கை வர்த்தக சபையின் தலைமை நிர்வாக அதிகாரியாகச் (2016- ஜனவரி 2020) செயற்பட்டார். திருமதி விஜயதிலக அவர்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக (2015 - ஏப்ரல், 2019) பணியாற்றினார். மேலும் அவர் சம்பத் வங்கி பி.எல்.சியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் அதனைத் தொடர்ந்து துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**கலாநிதி. ஜே.எம். சுவாமிநாதன், சட்டவழக்கறிஞர், உறுப்பினர்.**
55 ஆண்டுகளுக்கும் மேலாக சட்டத்தரணியாக் கடமையாற்றிய கலாநிதி. சுவாமிநாதன் அவர்கள் இலங்கையின் சட்ட ஆணைக்குழு, கொழும்புப் பல்கலைக்கழகப் பேரவை, சட்டக் கல்வி மன்றம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார். கலாநிதி. சுவாமிநாதன் அவர்கள் இலங்கையின் புலமைசார் சொத்துச் சட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும், நிறுவனங்களின் சட்ட ஆலோசனை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் அங்கம் வகிக்கிறார். அத்துடன் பல பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளிலும் பணியாற்றுகிறார். கலாநிதி சுவாமிநாதன் அவர்கள் ஜூலியஸ் அன்ட் க்ரீசி எனும் சட்ட நிறுவனத்தின் முன்னோடிப் பங்காளராக கடமையாற்றினார்.

**திரு. ஏ.ஏ.எம். பாத்திஹு, உறுப்பினர்.**
அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தின் முன்னாள் தலைமை மதிப்பீட்டாளர் திரு. பாத்திஹு அவர்கள் இலங்கையின் பொதுச் சேவையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் பெற்றவர், தற்போது இலங்கையின் மதிப்பீட்டாளர்கள் நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றுகிறார்.

**செல்வி. செல்லத்தம்பி சுமித்திரா, உறுப்பினர்.**
உளவியல் ஆலோசகரும் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாலினப் பிரச்சினைகள், நல்லிணக்கம் மற்றும் அங்கவீனம் ஆகிய துறைசார்ந்த ஆராய்ச்சியாளருமான செல்வி. சுமித்ரா அவர்கள் இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தத்துவம் மற்றும் உளவியல் ஆகிய துறைகளில் வருகை தரும் விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார். அவர் சிவில் அமைப்புகளின் பணிப்பாளர் சபைகளிலும் பணியாற்றி வருகின்றார்.

**மேஜர் ஜெனரல் (ஓய்வு) பாலித பெர்னாண்டோ - உறுப்பினர்.**
2005 ஆம் ஆண்டு மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்று 2015 ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரி.மேஜர் ஜெனரல் பெர்னாண்டோ தற்போது வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பணியாற்றுகிறார், மேலும் இலங்கைத் தடகளத் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

# பணிப்பாளர் நாயகம்

**திருமதி. நஸீமா அஹமட் - பணிப்பாளர் நாயகம்.**
நஸீமா அஹமட் அவர்கள் போட்டிப் பரீட்சையின் ஊடாக 2002 ஆம் ஆண்டு சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளராக பொதுச் சேவையில் தனது பணியினைத் தொடங்கினார். இதனைத் தொடர்ந்து பல அமைச்சுக்களில் பணிப்பாளராகவும் கடமையாற்றி உள்ளார். அவர் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாக 2021 ஆகஸ்ட் மாதம் கடமையேற்றார். அவர் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் குறுகிய காலப்பகுதிக்கு கடமையாற்றிய அதேவேளை தற்போது தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பணிப்பாளர்/ தலைமை நிர்வாக அதிகாரியாகவும் (பதில்) கடமையாற்றிவருகிறார். 2016 ஆம் ஆண்டுக்கான அவுஸ்திரேலிய விருதுகளுக்கான தூதுவராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

# உள்ளடக்கம்

1. இழப்பீடுகளுக்கான அலுவலகம் (அதன் நோக்கங்கள், அதன் ஆணை, செயற்பாடுகள்) ..................................................... 1

2. இன்னலுக்குள்ளான நபர்கள்.................................................. 3

3. இழப்பீடுகள்.......................................................................... 6

4. நிவாரணத்திற்கான விண்ணப்பங்கள்........................................... 10

# 1. இழப்பீடுகளுக்கான அலுவலகம்- அதன் நோக்கங்கள், ஆணை மற்றும் செயற்பாடுகள்

### 1.1 இச்சட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது?

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது பாராளுமன்றத்தின் 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டுச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு அக்டோபர் 22, 2018 அன்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. “இழப்பீடு” என்பது “நிவாரணம்” அல்லது “நிவர்த்தி செய்தல்” என்பதற்கான மற்றொரு சொல்லாகக் காணப்படுவதுடன் பாதிக்கப்பட்ட நபர்கள் “இன்னலுக்குள்ளான நபர்கள்” என்றும் குறிப்பிடப்படுகிறார்கள்.
இழப்பீடுகளுக்கான அலுவலகமானது நாட்டில் இடம்பெற்ற மற்றும் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய சில மோதல்களால் இன்னலுக்குள்ளான நபர்களின் நிலைமையினைக் கருத்திற் கொள்வதற்காகவும் அத்தகைய நபர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காகவும் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட ஓர் அலுவலகமாகும். இழப்பீட்டு ஆட்சி எல்லைக்குள் உள்ளடங்கும் வெவ்வேறு மோதல்களின் வகைகள் இக்கைநூலில் தெளிவு படுத்தப் பட்டுள்ளதுடன், அவை “மோதல்கள்” என இக்கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.2 இச்சட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது?

குறிப்பிடப்பட்ட மோதல்களின் காரணமாக இழப்பு அல்லது சேதத்தைச் சந்தித்த நபர்களுக்கு அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் உயிரிழந்திரிந்தாலோ காயமுற்றிருந்தாலோ, காணாமலாக்கப்பட்டிருந்தாலோ அல்லது அவர்களின் சொத்துக்கள் இழக்கப்பட்டிருந்தாலோ அல்லது சேதமாக்கப்பட்டிருந்தாலோ அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் உதவுவதே இதன் நோக்கமாகும்.

இழப்பீட்டுகளுக்கான அலுவலகத்தின் சட்டமானது “*அனைத்து இலங்கையர்களின் உரிமைகளுக்குமான ஒரு பயனுள்ள தீர்வாக வகுக்கப்பட்டுள்ள இவ் விரிவான இழப்பீட்டுத் திட்டமானது நல்வாழ்வுக்கான நல்லிணக்கத்தை மேம்படுத்துவதுடன் எதிர்காலத் தலைமுறையினர் உட்பட அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பிற்கும் பங்களிக்கும்*” என்பதனை அங்கீகரிக்கின்றது.

### 1.3 இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் கட்டமைப்பு யாது?

அரசியலமைப்பு சபையின் ( பின்னர் பாராளுமன்ற சபை ) பரிந்துரையின் பேரில் ஐந்து உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவதுடன் அவர்களில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். சட்டத்தில் கொள்கைகளைச் செயற்படுத்துவதை உறுதி செய்யும் பொறுப்பானது உறுப்பினர்களுக்கு உரித்துடையதாகிறது. முதல் ஐந்து உறுப்பினர்கள் அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பெயரில் ஜனாதிபதியினால் 2019 ஏப்ரல் மாதம் மூன்று ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டனர். இழப்பீட்டுகளுக்கான அலுவலகத்தின் செயலகமானது அதன் கொள்கைகளையும் செயற் திட்டங்களையும் அமுலாக்குவதன் பொருட்டு ஒரு பணிப்பாளர் நாயகத்தையும் அதற்குத் தேவையான ஊழியர்களை உள்ளடங்கியதாகவுள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகம் அதன் செயல்பாடுகளை நிறைவேற்றப் பிராந்திய அலுவலகங்களையும் நிறுவ முடியும். ஆயினும் இப் பிராந்திய அலுவலகங்கள் தற்போது நிறுவப்படவில்லை. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சேவைகளினை பெற்றுக்கொடுப்பதற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களிலுள்ள அலுவலக உத்தியோகத்தர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

1.4 **இழப்பீட்டுக்கான சட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?**

இச் சட்டத்தில் ஒரு இன்னலுக்குள்ளான நபர் என்பவர் யார், எந்த வகையான இழப்பீடு நிவாரணமாக வழங்கப்படலாம் மற்றும் சேதத்தை ஏற்படுத்தும் மோதல்களின் வகைகள், அவை ஏற்படும் சந்தர்ப்பங்கள் அவற்றிற்கு வழங்கப்படக் கூடிய இழப்பீடுகள் என்பன தொடர்பான விபரங்களை இச்சட்டம் வழங்குகிறது.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்க இழப்பீடுகளானது தனிநபர்களுக்கும் குழுக்களுக்கும் (கூட்டு இழப்பீடு ) வழங்கப்படுகின்றது.

இதன் பொருட்டு, உறுப்பினர்கள் பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்ததன் பின்னர் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்கினர் அத்துடன் அவை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. விபரங்களுக்கு பகுதி 3 ஐப் பார்க்கவும்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஆணை கடந்த கால சம்பவங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் வழங்குவது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மோதல்கள் காரணமாக பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் நிவாரணம் வழங்குவதாக அமைகிறது. எனவே இது கடந்த கால சம்பவங்களை மட்டுமல்லாமல், எதிர்காலத்தையும் நோக்குகிறது.

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது மோதலால் பாதிக்கப்பட்ட நபர்களின் தேவைகளை மட்டுமே நிவர்த்தி செய்கிறது. இதில் இயற்கைப் பேரழிவுகளினாலோ அல்லது தனிப்பட்ட மோதல்களினாலோ உருவாக்கப்படுகின்ற பிரச்சினைகளை முகவரிப்படுத்துவதில்லை.

2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டுச் சட்டத்தின் முழு உள்ளடக்கத்தினையும் இழப்பீடுகளுக்கான அலுவலக இணையத்தளமான www.reparations.gov.lk இன் (''சட்ட விதிகள்'' எனும் பகுதியின் கீழ்) பதிவிறக்கம் செய்ய முடியும்.

1.5 **எந்தவொரு நபருக்கும் எதிராக இழைக்கப்பட்ட ஒரு குற்றத்தைப் பற்றி இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் புகார் செய்ய முடியுமா?**

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் மோதலால் பாதிக்கப்பட்டு குற்றம் இழைக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் வழங்க மட்டுமே முனைகிறது. குற்றவியல் மற்றும் குற்றங்களின் புகார்களை அணுகவோ எந்தவொரு நபர் மீதும் வழக்குத் தொடரவோ இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் முடியாது. இது போன்ற புகார்களை விசாரிப்பதற்கான பொருத்தமான சட்டரீதியான அமுலாக்கும் அதிகாரத்தினை கொண்டுள்ள காவல்துறையிடமே இவ்வாறான புகார்களைத் தெரிவிக்க வேண்டும், அதன்படி, இழப்பீடுகளுக்கான அலுவலகமானது, தவறு செய்தவர்களை விசாரிக்கவோ, வழக்குத் தொடரவோ அல்லது தண்டிக்கவோ முடியாது.

மோதல்களின் போது ஒரு நபரின் குற்றவியல் நடத்தையின் விளைவாக தனிப்பட்ட காயம் அல்லது உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம் அல்லது வேறு ஏதேனும் இழப்பை எதிர்நோக்கிய ஒருவர், நிவாரணத்திற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்ய முடியும். இழப்பீடுகளுக்கான அலுவலகம் விண்ணப்பத்தைப் பரிசீலித்து, அவ் விண்ணப்பதாரர் ஒரு இன்னலுக்குள்ளான நபர் என்று நிறுவப்படுமிடத்து, அந்த நபரின் தேவைகளை மதிப்பிடுவதோடு, அவரது வாழ்க்கையினை மீண்டும் கட்டியெழுப்ப அந்த நபருக்கு நியாயபூர்வமான நிவாரணத்தினை வழங்குவதையும் கருத்திற் கொள்ளும்.

# 2. இன்னலுக்குள்ளான நபர்கள்

## 2.1 "இன்னலுக்குள்ளான நபர்" எனப்படுபவர் யார்?

பின்வரும் எந்தவொரு மோதல்களின் போதும் நிகழ்ந்த 'இழப்பு அல்லது சேதத்தை' எதிர்நோக்கிய ஒருவர் 'இன்னலுக்குள்ளான நபர்'ஆவார் :

அ. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடந்த ஆயுத மோதல்கள் காரணமாக அல்லது அந்த மோதல்களின் பின்னர் இடம்பெற்ற விளைவுகள் காரணமாக அல்லது

ஆ. அரசியல் அமைதியின்மை காரணமாக அல்லது

இ. உள்நாட்டு இடையூறுகள் காரணமாக அல்லது

ஈ. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் காரணமாக.

**ஓர் "இன்னலுக்குள்ளான நபரானவர்" -**

அ. மோதல்களின் போது நிகழ்ந்த இழப்பு அல்லது சேதத்தினைச் சந்தித்த நபர் அல்லது

ஆ. மோதல்களின் போது ஒரு நபர் உயிரிழந்திருந்தாலோ அல்லது காணாமல் போயிருந்தாலோ அல்லது அவரைக் கண்டுபிடிக்க முடியாத நிலையிலோ குறித்த நபரின்

i. வாழ்க்கைத்துணை
ii. பிள்ளைகள்
iii. பெற்றோர்
iv. சகோதரர் அல்லது சகோதரி.
v. மாமியார் /மாமனார் , மைத்துனர் / மைத்துனி, மருமகன் /மருமகள்
vi. பேரப்பிள்ளை மற்றும் தாய், தந்தையின் பெற்றோர்.

## 2.2 "இழப்பு" அல்லது "சேதம்" என்றால் என்ன?

ஒரு நபருக்கு (ஒரு இன்னலுக்குள்ளான நபர்) எந்தவொரு மோதல்களினாலும் ஏற்பட்ட இறப்பு அல்லது சேதத்தினால் அந்த நபர் -

அ) இறப்பு காரணமாக ஒரு குடும்ப உறுப்பினரை இழந்திருத்தல் அல்லது

ஆ) குடும்ப உறுப்பினர் காணாமல் போவதுடன் அக் காணாமல் போனவரினை ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாமை காரணமாக ஒரு குடும்ப உறுப்பினரை இழந்துவிடல் அல்லது

இ) உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ தீங்கு அல்லது காயம் ஏற்பட்டிருத்தல் அல்லது

ஈ) நபருக்குச் சொந்தமான அசையக்கூடிய அல்லது அசையாச் சொத்தை இழந்துவிடல் அல்லது சொத்து சேதமடைதல்.

### 2.3 வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் (வலுக்கட்டாயமாகக் காணாமல் போக்கப்படுதல்) என்றால் என்ன?

அ) வலிந்து காணாமலாக்கப்படுவது எவ்வாறெனில் கீழ்வரும் நபரால் அதாவது

i. அரச உத்தியோகத்தகராகவிருக்கின்ற, அல்லது
ii. அலுவலகமுறையிலான பதவியில் செயலாற்றுகின்ற நபர் எவரேனும் அல்லது
iii. அரசின் அதிகாரவளிப்புடன், ஆதரவுடன் அல்லது ஒப்புதலின் அடிப்படையில் செயலாற்றும்
iv. எந்தவொரு நபராலும் அல்லது
v. வேறு எந்த நபராலும்

கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், தவறான முறையில் அடைத்து வைக்கப்படுதல், ஆட்கவரப்படுதல் அல்லது ஆட்கடத்தப்படுதல் அல்லது வேறுவிதத்தில் அவரது சுதந்திரத்தை இழக்கச் செய்து; மற்றும்

ஆ) அவரது சுதந்திரத்தை இழக்கச் செய்ததை ஏற்காமல் மறுத்து ; மற்றும்

இ) அவரது கதியை மறைத்தல் அல்லது அந்த நபரின் இருப்பிடத்தை வெளியிடத் தவறுதல் போன்றவற்றின் காரணமாக வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் ஏற்படுகிறது.

2018 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் திகதி நடைமுறைக்கு வந்த, இலங்கையின் சட்டத்தின்படி, 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, “வலுக்கட்டாயமாகக் காணாமல் போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயச் சட்டம்” என்ற தலைப்பின் கீழ் “வலுக்கட்டாயமாகக் காணாமல் போக்கப்படுதல்” குற்றமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 2010 டிசம்பர் 23 ஆம் திகதி நடைமுறைக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் “வலுக்கட்டாயமாகக் காணாமல் போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயத்தினை” அடிப்படையாகக் கொண்டது.

### 2.4 ஒரு குழுவை “இன்னலுக்குள்ளான நபர்கள்” எனக் கருத முடியுமா?

ஆம், எந்தவொரு மோதல்கள் காரணமாகவும், ஒரு குழு அல்லது சமூகம் கூட்டாக இழப்பு அல்லது சேதத்தினை எதிர்நோக்கியிருந்தால் அக் குழு அல்லது சமூகத்தில் உள்ள நபர்கள் இன்னல்களுக்குள்ளான நபர்களாகக் கருதப்படுவர்.

### 2.5 பாதுகாப்புப் படையின் உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தினரும் “இன்னல்களுக்குள்ளான நபர்களாகக்” கருதப்படுகிறார்களா?

ஆம், ஏதேனும் மோதல்களினால் இழப்பு அல்லது சேதத்தினை எதிர்நோக்கிய பாதுகாப்புப் படையின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் “இன்னல்களுக்குள்ளான நபர்கள்” எனக் கருதப்படுகிறார்கள்.

**2.6 நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்து கொண்டிருந்த அல்லது இன்னும் வாழ்ந்து வருபவர்களுக்கு மாத்திரமே இழப்பீடு வழங்கப்படுமா?**

இல்லை. இழப்பீடு என்பது நாட்டின் எந்தவொரு குறிப்பிட்ட புவியியல் பகுதியிலும் வசிப்பவர்களுக்கு மட்டுமானது என வரையறுக்கப்பட்டதல்ல. மாறாக எந்தவொரு மோதல்களினாலும் எந்தவொரு நபரும் இழப்பு அல்லது சேதத்தினை எதிர்நோக்கியிருந்தால் மற்றும் சமூகத்திலும் இன்னல்களுக்குட்பட்டிருந்தால், அந்த நபர் அல்லது அவரது உறவினர் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் வாழ்ந்தவராகவோ அல்லது வாழ்ந்து கொண்டிருப்பவராகவோஇருக்குமிடத்து இழப்பீடுகளைப் பெற உரித்துடையவராவார். இச் சட்டமானது நாட்டின் அனைத்துப் பகுதியிலும் அனைத்து சமூகத்திலும் வாழும் அனைத்து நபர்களுக்கும் சேவை செய்ய வேண்டும் எனக் கருதுகிறது.

**2.7 காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் இன்னலுக்குள்ளான நபர்களாகக் கருதப்படுகின்றனரா?**

ஆம். இக்கைநூலின் பகுதி 2 இல் குறிப்பிடப்பட்டவாறு எவரேனும் மோதல்களின் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டிருந்தால், அந்த நபரின் குடும்ப உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட நபர்களாக் கருதப்படுவதோடு நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களாக இருப்பார்கள்.

# 3. இழப்பீடுகள்

## 3.1 இழப்பீடுகள் என்றால் என்ன?

“இழப்பீடு” என்பது நிவாரணம் அல்லது பரிகாரங்கள் அல்லது நிவர்த்தி செய்தல் என்பதனைக் குறிக்கும் மற்றொரு சொல் ஆகும்.

## 3.2 இழப்பீடுகளை வழங்குவது அரசாங்கத்தின் புதிய முயற்சியா?

இல்லை. தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் அதாவது மோதல் சூழ்நிலைகள் காரணமாகவோ அல்லது இயற்கைப் பேரழிவுகள் காரணமாகவோ இழப்பு அல்லது சேதத்தினை எதிர்நோக்கிய அல்லது உறவினரை இழந்த நபர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் கருத்தானது நீண்ட காலமாகவே நம் அரசினால் ஏற்றுக்கொள்ளப்படதொன்றாகும். இதற்கு முன்னரே 1987 ஆம் ஆண்டளவில் நட்டஈடு வழங்குவதற்கான கொள்கையானது 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைச் சட்டத்தினூடாக அங்கீகரிக்கப்பட்டது. அது ரெப்பியா (REPPIA) சட்டம் என அழைக்கப்பட்டது.

## 3.3 புதிய இழப்பீட்டுச் சட்டம் ஒன்று ஏன் அவசியமானதாகக் கருதப்பட்டது?

இன்னலுக்குள்ளான நபர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவும் வகையில் மிகவும் அர்த்தமுள்ள வழிகளில் உதவுவதில் கவனம் செலுத்துவதற்கு ஒரு புதிய சட்டம் அவசியம் என்று கருதப்பட்டது. புதிய சட்டம் அனைத்து இலங்கையர்களின் உள்ளார்ந்த கண்ணியம் மற்றும் சமமானதும் பிரிக்க முடியாததுமான மனித உரிமைகளை அங்கீகரிக்கும் அரசியலமைப்பின் ஏற்பாட்டினை மீண்டும் வலியுறுத்துகிறது. அத்துடன் இந்த உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுவது அரசின் கடப்பாடு ஆகும்.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மானியங்களை வழங்குவதன் மூலம் “புனர்வாழ்வு” செய்வதும், மற்றும் கலவரங்களால் பாதிப்பிற்குள்ளான சொத்துக்களைச் சரிசெய்து மீட்டெடுப்பதுமே ஆட்கள் ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையின் ( REPPIA ) நோக்காக இருந்தது. இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டமானது நட்டஈடுகளை வழங்குவதற்கும் அப்பாற்பட்ட நிவாரணத்தினை வழங்குகிறது. உள சமூக ஆதரவு மற்றும் சமூகங்களுக்கான பரந்த அளவிலான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான அதிகார மட்டங்களுக்குப் பரிந்துரை செய்தல் உட்பட பல வழிகளில் மக்களுக்கு உதவி வழங்கும் பணியினைக் கையாழுகின்றது. இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகளை மதிப்பிடுவதன் மூலம் அவர்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினைகளுக்கு பதிலளிக்க வேண்டியதன் அவசியத்தை இது அங்கீகரிக்கிறது. மேலும் இன்னலுக்குள்ளான நபர்களுக்கான அர்த்தமுள்ள நிவாரணத்தை வழங்குதன் மூலம் அவர்களது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதனையும் மீட்டெடுப்பதனையும் அங்கீகரிக்கின்றது.

முக்கியமாக, மோதல்கள், உள்நாட்டுக் கலவரங்கள் மற்றும் அரசியல் அமைதியின்மை என்பவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் இழப்பீடுகளை இது வழங்குகிறது. ஆனால் இயற்கைப் பேரழிவுகள் அல்லது தனிநபர் மோதல்கள் காரணமாக எழும் சூழ்நிலைகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதில்லை.

இதன்படி, ஏற்கனவே நடைபெற்ற அல்லது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மோதல்களால் பாதிக்கப்படுகின்ற மக்களிடையே நல்லிணக்கத்திற்கு பங்களிக்கும் வகையிலான அர்த்தமுள்ள நிவாரணங்களை வழங்குவதற்கான தொனிப்பொருளினை இந்தச் சட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

### 3.4 இழப்பீடுகளாக எவ்வகையான நிவாரணங்கள் வழங்கப்பட முடியும்?

கொள்கை ஆவணம் பின்வருவனவற்றின் அடிப்படையில் இழப்பீடுகளை வழங்குகிறது:

1. வாழ்வாதார உதவிகள்
2. நட்ஈட்டுக் கொடுப்பனவுகளும் நிதியுதவிகளும்
3. காணி உரிமைகளை மீளளித்தல்
4. வீட்டுவசதியினை வழங்குதல்
5. சமுக உட்கட்டமைப்பின் அபிவிருத்தி
6. நிர்வாகம் சார்ந்த நிவாரணம்
7. உள-சமூக ஆதரவு
8. மேம்பட்ட ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகள் மீளநிகழாமைக்கான நடவடிக்கைகள்

### 3.5 மேற்கூறிய அனைத்திற்கும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் நேரடி உதவியை வழங்க முடியுமா?

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது விண்ணப்பதாரர்களுக்கு பண இழப்பீட்டினை வழங்குவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளது.

எனினும் வேறு சில நிவாரண நடவடிக்கைகளை அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் சட்டப்பூர்வ அமைப்புகளினூடாக தற்போது கிடைக்கப் பெறும் வளங்களைப் பயன்படுத்தி மாத்திரமே வழங்க முடியும். இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகள் கண்டறியப்பட்ட பின்னர், இன்னலுக்குள்ளான நபர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் இழப்பீடுகளுக்கான அலுவலகம் இவ் அரச அமைப்புகளுடன் கலந்துரையாடும். அதே போன்று இவ் அலுவலகம் மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கும் திறன் கொண்ட சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து செயல்படுகிறது.

### 3.6 இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகள் எவை என்பதனை இழப்பீடுகளுக்கான அலுவலகம் எவ்வாறு அடையாளம் காண்கிறது?

கொள்கை ஆவணத்தில் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகள் இன்னலுக்குள்ளான நபர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே அடையாளம் காணப்பட்டன. இன்னலுக்குள்ளானவர்களுக்குத் தேவைப்படும் மிகவும் உடனடியான உதவிகளாக இவை அடையாளம் காணப்பட்டன. மேலும், இழப்பீடுகளுக்கான அலுவலகம் 25 மாவட்டங்களிலும் உள்ள அனைத்து மாவட்டச் செயலாளர்களுடனும் கலந்துரையாடி நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், இன்னலுக்குள்ளான நபர்களுக்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன குறித்து தகவல் சேகரித்துள்ளது. மேலும் இன்னலுக்குள்ளான நபர்களிடமிருந்து

தேவைகள் தொடர்பான தகவல்கள் தொடர்ந்தும் பெறப்பட்டு அவை கவனத்தில் கொள்ளப்படும்.

உள சமூக ஆதரவைப் பொறுத்தவரை, இழப்பீடுகளுக்கான அலுவலக உத்தியோகத்தர்கள் ''சம்பவ முகாமையாளர்களாக'' பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்னலுக்குள்ளான நபர்களுடன் பணிபுரிந்து, அரசாங்க சேவைகளைத் தேவைக்கேற்ப அணுகுவதற்கு அவர்களுக்கு உதவுவார்கள்.

வாழ்வாதாரத் திட்டங்களைப் பொறுத்தவரை, இழப்பீடுகளுக்கான அலுவலகம் சுய தொழில் வாய்ப்புகளைத் தொடர ஆர்வமுள்ளவர்களுக்கு அறிவு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தும்.

ஏனைய பிரிவுகள் தொடர்பில், தேவைகளைக் கண்டறிந்து, அரசு மற்றும் பிற பொருத்தமான நிறுவனங்களுடன் கலந்துரையாடி, நிவாரணம் வழங்குவதற்கான கருத்திட்டங்களைச் செயற்படுத்தும்.

## 3.7 இழப்பீடு வழங்குவதை தீர்மானிக்கும் போது என்ன அளவுகோல்கள் பின்பற்றப்படும்?

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் உருவாக்கப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள், இழப்பீடுகளை நிர்ணயிப்பதில் பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்கிறது.

1. பாதிக்கப்பட்டோரை மையமாகக் கொள்ளல்- பாதிக்கப்பட்ட நபருக்கு எது சிறந்தது என்பதன் அடிப்படையிலேயே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்படும்.

2. இன்னலுக்குள்ளான நபர்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு உரிய தகுதியினைத் தீர்மானிக்கும் அளவுகோல்கள்- இழப்பீடுகள் வழங்கப்படக்கூடிய பாதிப்பின் தன்மை மற்றும் தீவிரத்தன்மை தொடர்பான அளவுகோல்கள் கருத்திற் கொள்ளப்படும்.

3. இழப்பீடுகளின் வகை மற்றும் பொருத்தமான இடங்களில், தகுதியுள்ள பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடுகளின் தொகை - ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், வழங்கப்பட்ட நிவாரணத்தின் வகையும் வழங்கப்படும் தொகையும் இன்னலுக்குள்ளான நபரின் தேவைகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

4. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு நிதி சார்ந்த இழப்பீடுகளை வழங்குவதற்கான தகுதிகள்- நிதி இழப்பீடு மற்றும் இழப்பீட்டிற்குத் தகுதியானவர் மற்றும் இழப்பீட்டின் தொகை ஆகியவற்றைத் தீர்மானிக்க வழிகாட்டும் அளவுகோல்கள் தீர்மானிக்கப்படும்.

5. இன்னலுக்குள்ளான நபர்களின் அவசர இழப்பீடுகளுக்கான தகுதியின் அளவுகோல்கள் - சில சூழ்நிலைகளில், இன்னலுக்குள்ளான நபர்களுக்கு உடனடித் தலையீடுகள் தேவைப்படலாம், இவை கருத்திற்கொள்ளப்படும்.

6. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை வழங்க அல்லது வழங்குவதில் உதவக்கூடிய நிறுவனங்கள் - இழப்பீடுகளுக்கான அலுவலகமானது நிவாரண நடவடிக்கைகளை வழங்க ஏனைய நம்பகமான நிறுவனங்களை அடையாளம் கண்டு நிவாரணங்களை வழங்குவதில் அவற்றுடன் இணைந்து பணிபுரியும்.

7. இழப்பீடுகளுக்கான விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் அளவுகோல்கள்- இன்னலுக்குள்ளான நபர்களில், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைக் கண்டறிவத்கு முன்னுரிமைப் பட்டியல் உருவாக்கப்படும்.

8. நம்பகத்தன்மையை சரிபார்ப்பதற்கான அளவுகோல்கள் - நிவாரண நடவடிக்கைகளைப் பெறுபவர்கள் நியாயமான விண்ணப்பதாரர்கள் என்பதை உறுதிப்படுத்துவது முக்கியம், எனவே நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் தீர்மானிக்கப்படும்.

9. உயிரிழந்தோரை நினைவுகூருவதற்கான மற்றும் நினைவுச் சின்னங்கள் தொடர்பிலான அளவுகோல்கள்- நினைவேந்தல் என்பது இறந்தவர்களை எண்ணித் துக்கம் அனுஷ்டித்தல், நினைவுகூருதல் மற்றும் நினைவுபடுத்துதல் என்பவினால் குடும்பங்களின் உணர்ச்சித் தேவைகளை நிவர்த்தி செய்வதாகும், ஆனால் இது பயங்கரவாதிகள் அல்லது பிரிவினைவாதிகளை நினைவுகூருவதற்கானது அல்ல.

10. இன்னலுக்குள்ளான நபர்களின் குறிப்பிட்ட குழுக்களின் விசேட தேவைகளை நிவர்த்தி செய்தல் - சில குழுக்களின் விசேட தேவைகளை நிவர்த்தி செய்ய விசேட உதவிகள் தேவை. இவை கருத்திற் கொள்ளப்படும். இந்த சிறப்புக் குழுக்களாவன

    1. பெண்கள்;
    2. சிறுவர்கள்;
    3. முதியவர்கள்;
    4. அங்கவீனர்கள், (அங்கவீனர்களான அரச ஆயுதப்படை, காவல்துறையின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் உட்பட)
    5. இடம்பெயர்ந்தவர்கள்;
    6. காணாமல் ஆக்கப்பட்ட/இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள், (காணாமல் போன /இறந்த அரச ஆயுதப்படை, காவல்துறை உறுப்பினர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட);
    7. பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள்; மற்றும்
    8. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் எல்.டி.டி.ஈ உறுப்பினர்கள் உட்பட முன்னாள் சிறுவர் போராளிகள்.

# 4. நிவாரணத்திற்கான விண்ணப்பங்கள்

### 4.1 இழப்பீடுகளைப் பெறுவதற்காக ஒரு இன்னல்களுக்குள்ளான நபர் என்ன செய்ய வேண்டும்?

<u>நிதிசார் இழப்பீடுகளை பெறுவதற்கு-</u>

இன்னலுக்குள்ளான நபர் இழப்பீட்டுக்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க வேண்டும். இன்னல்களுக்குள்ளான நபர் , இழப்பு அல்லது சேதத்தினை எதிர்நோக்கியமையினை உறுதிப்படுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியது இன்றியமையாததாகும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை தேவையான ஆவணங்களுடன் குறிப்பிட்ட பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது இவ் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, இன்னலுக்குள்ளான நபர் பண இழப்பீடுகளைப் பெறத் தகுதியுடையவரா எனக் கண்டறிவதுடன் அவ்வாறு தகுதியுடையவராயின் எவ்வகையான நிவாரணத்தினை வழங்க வேண்டும் என்பதனைத் தீர்மானிக்கும்.

பண இழப்பீடு பெற்றவர்கள் வேறு வகையான நிவாரணங்களுக்கு விண்ணப்பிக்கலாம் ஆனால் மேலதிகப் பண இழப்பீட்டினைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் அல்ல.

<u>நிதி சார்பற்ற (நட்டஈடு அல்லாத) நிவாரணங்களை பெறுவதற்கு-</u>

இன்னல்களுக்கான நபர்களின் தேவைகளினை மதிப்பீடு செய்ததன் பின்னர் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது அவர்களுக்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும். இதனைத்தவிர இன்னல்களுக்கான நபர்கள் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளைக் குறிப்பிட்டு தேவையான உதவிகளைக் கோரி இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

இவ்விண்ணப்பதாரிக்கு ஏற்கனவே ஏதாவது நிவாரணங்கள் வழங்கப்பட்டிருந்தால் மேலதிக உதவிகளை தீர்மானம் செய்யும் போது இந்நிவாரணங்கள் கருத்திக்கொள்ளப்படும்.

### 4.2 விண்ணப்பத்தினை மேற்கொள்வதற்கான கால வரையறை காணப்படுகின்றதா?

நிதி சார் இழப்பீடுகள் தவிர்ந்த ஏனைய நிவாரணங்களுக்கு எவ்வித கால வரையறையுமில்லை. நிதி சார் இழப்பீடுகள் விடயத்தில் நேரகால வரம்புகளை விதிக்க வேண்டியது அவசியமாகின்றது. நீண்ட காலத்திற்குப் பின்னர் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் தாமதத்திற்கான சரியான காரணம் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு சூழ்நிலைகளின் அடிப்படையைக் கருத்திக்கொண்டு மாத்திரம் அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

### 4.3 இழப்பீடுகளுக்காக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு வாக்குமூல ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமா?

விண்ணப்பதாரியோ அல்லது வேறு எவரோ வாக்குமூல ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கான கட்டாய தேவைப்பாடு இல்லை.

**4.4 விண்ணப்பதாரியினால் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் தொடர்பில் இரகசியத்தன்மையானது பேணப்படுமா?**

ஆம். நடைமுறையிலுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இன்னல்களுக்குள்ளான நபர்களால் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் தகவல்களின் இரகசியத்தன்மையை பேணுவதற்கான சட்டக்கடப்பாடு காணப்படுகின்றது.

**4.5 ஒரு நபர் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு விண்ணப்பத்தினை மேற்கொள்வதன் மூலமோ அல்லது இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடமிருந்து இழப்பீட்டினைப் பெற்றிருப்பதனாலோ, அவருக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றம் தொடர்பாகக் காவல்துறை அல்லது பிற அதிகாரசபைக்கு புகார் செய்வதிலிருந்து அவர் தடுக்கப்படுகிறாரா?**

இல்லை. நபர் ஒருவர் நிவாரணத்தினைப் பெறுவதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு விண்ணப்பித்திருந்தாலும் அல்லது இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் நிவாரணம் வழங்கப்பட்டிருந்தாலும் கூட, அந் நிலையில் குறித்த நபருக்குக் கிடைக்கக்கூடிய ஏனைய அனைத்துத் தீர்வுகள் குறித்தும் அவர் மேற்கொண்டு நடவடிக்கையினைத் தொடர்வதற்குத் தடையாக அமையாது. அவர் அனைத்து வேறு பரிகாரங்களையும் நாட முடியும். இழப்பீட்டு அலுவலகத்திற்கு நிவாரணம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் இன்னலுக்குட்பட்ட ஒரு நபர் வேறு தீர்வுகளை நாடிச்செல்வதற்கு ஒரு தடையாக அமையாது.

**4.6 ஒரு நபர் ஏற்கனவே புனர்வாழ்வு அதிகாரசபையிடமிருந்து (REPPIA) இழப்பீட்டினைப் பெற்றிருப்பின், அந் நபர் இழப்பீட்டினைக் கோரி இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடம் விண்ணப்பிக்க முடியுமா?**

ஆம். இன்னலுக்குள்ளான நபர் ஆட்கள்,ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையிலிருந்தோ அல்லது இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடமிருந்தோ நட்டஈடுகளைப் பெற்றிருந்தாலும் கூட இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடம் இழப்பீடுகளைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம். எவ்வாறாயினும், ஏற்கனவே நிதிசார் இழப்பீடுகளைப் பெற்றவர்கள் மேலதிக நிதி தொகையைப் பெறுவதற்கு உரித்துடையவர்களல்ல. தகுந்த இழப்பீடுகளை வழங்கும் பொருட்டு, இன்னலுக்குள்ளான நபர் ஆட்கள்,ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை அல்லது இழப்பீடுகளுக்கான அலுவலகம் அல்லது வேறு எந்த மூலத்திலிருந்தும் நிதிசார் நட்டஈடாகப் பெற்ற முந்தைய நிவாரணம் கருத்தில் கொள்ளப்படும்.

**4.7 ஒரு நபர் ஏற்கனவே இழப்பீடுகளுக்கான அலுவலகத்திலிருந்து நிவாரணத்தினைப் பெற்றுள்ளார், ஆனால் அவர் அதில் திருப்தி அடையவில்லை, அவர் மீண்டும்வேறு விண்ணப்பத்தினை மேற்கொள்ள முடியுமா?**

விண்ணப்பதாரர் இன்னலுக்குள்ளான நபராகவிருக்குமிடத்து, அவருக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தில் திருப்தி அடையவில்லையெனில், தனது குறைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் அதற்கான இலக்கங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

**4.8 காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) பரிந்துரைகளை இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஏற்றுக்கொள்ளுமா?**

ஆம். காணாமல் போனதாகக் கூறப்படும் நபர் தொடர்பாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பரிந்துரை செய்யுமிடத்து, இழப்பீடுகளுக்கான அலுவலகம் அப் பரிந்துரைகளைப் பரிசீலித்து, அந்த நபரின் குடும்பத்தைத் தொடர்புகொண்டு தகுந்த தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

**4.9 ஏற்கனவே இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நிலை தொடர்பிலான தகவலினை யாரிடம் பெற்றுக்கொள்ள முடியும்?**

விண்ணப்பத்தின் நிலை தொடர்பிலான விபரத்தைப்பெறுவதற்கு விண்ணப்பதாரி இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினைத் தொடர்பு கொள்வதற்கான இலக்கங்கள் பின்வருமாறு-

இறப்பு அல்லது காயத்திற்கான விண்ணப்பங்கள் தொடர்பாக- 011 2575 831
சொத்து சேதத்திற்கான விண்ணப்பங்கள் தொடர்பாக- 011 2575 818

**4.10 ஏனைய இழப்பீட்டுத் திட்டங்கள் பற்றிய விவரங்களை எவ்வாறு பெறலாம்?**

மேற்கூறப்பட்ட தொலைபேசி இலக்கங்களைத்தவிர விபரங்களைப் பெறுவதற்குப் பின்வரும் இலக்கங்களிற்கும் அழைப்பினை ஏற்படுதடுத்தலாம்-
011 2575 836
011 2575 826

அலுவலகத்தின் இணையதளத்திலும் (www.reparations.gov.lk) நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன

இதனைத்தவிர குறித்த மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலும் இது தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இழப்பீடுகளுக்கான அலுவலகம்,
இல: 408, காலி வீதி, ,கொழும்பு - 03.
தொலைபேசி இல: 011-2575803 / 011-2575813
இணையத்தள முகவரி: **info@reparartions.gov.lk**